மன்றப்பொருள்..1

செங்கோட்டை நகராட்சி பகுதியில் UIDSSMT சுழற்சி நிதி 2018-2019-ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல முறை ஆணை எண். 13277/2018/WS1 நாள்.. 03.07.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுதன் அடிப்படையில் செங்கோட்டை நகராட்சி பகுதியில் ரூ. 175.00 லட்சம் மதிப்பீட்டில் குடிநீர் இணைப்பு இல்லாத குடியிருப்புகள் மற்றும் வணிகப்பயன்பாட்டு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 101, நாள். 14.12.2018ல் ஒப்புதல் வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 18.01.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விபரங்களின் விபரங்கள்

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் இணைப்பு இல்லாத குடியிருப்புகள் மற்றும் வணிகப்பயன்பாட்டு கட்டிடங்களுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணி மேற்கொள்ள | ரூ. 175.00 | திரு.ஏ.முத்தையா சாமி, துவரங்காடு | 16.02 % மதிப்பீட்டை விட கூடுதல் |
| | | | திரு.எஸ்.பரமசிவன், அரியப்பபுரம் | 9.04 % மதிப்பீட்டை விட கூடுதல் |

மேற்படி பணி மேற்கொள்ள ஒப்பந்ததாரர்கள் இருவருமே மதிப்பிட்டு விகிதத்திற்கு கூடுதலாக விலைவிகிதம் குறிப்பிட்டுள்ளதால், இவ்வலுவலக அறிவிப்பு கடிதத்தின் படி 21.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்பு கூட்டம் நடத்தப்பட்டதில் ஒப்பந்ததாரர்கள் இருவருமே ஒப்பந்தப்புள்ளி விலைகுறைப்பு செய்யவில்லை. எனவே, மீண்டும் 25.01.2019 அன்று நடந்த ஒப்பந்தப்புள்ளி விலை குறைப்பு கூட்ட நடத்த பட்டதில் ஒப்பந்தக்காரர் திரு.எஸ். பரமசிவம் என்பவர் மதிப்பீட்டை கூடுதலாக 8.50 சதவிகிதத்திற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளார். பின்னர் திருநெல்வேலி மண்டல செயற்பொறியாளர் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்ட 28.01.2019 அன்று நடத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறைப்பு கூட்டத்தில் ஒப்பந்தக்காரர் திரு.எஸ் பரமசிவம் 4.95 சதவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதலாக குறைவு செய்து ஒப்புதல வழங்கியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1.வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்சமாக 4.95 சதவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதல் ஒப்பந்தப்புள்ளி விகிதத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ள திரு. எஸ். பரமசிவம் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்திற்கு தமிழ்நாடு நகராட்சிகளின் பொறியியல் கையேடு சேப்டர் II பிரிவு 2.7.2-ன் கீழ் நிர்வாக நலன் கருதி மேற்படி பணி மேற்கொள்ள ஒப்புதல் வழங்கலாம்.

2.கூடுதல் செலவினத்தை நகராட்சி நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.563/2018/இ1)

தீர்மானம் எண். 108 திரு பரமசிவன் ஒப்பந்தக்கார்ர் ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.